தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம், கபிஸ்தலம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் அங்கன்வாடி மைய புதிய கட்டிடத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாணசுந்தரம், செ.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கோ.தாமரைச்செல்வன், பாபநாசம் ஒன்றிய பெருந்தலைவர் சுமதி கண்ணதாசன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே விஷ சாராயம் குடித்து இறந்த 12 பேரின் குடும்பத்திற்கு தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை அமைச்சர்கள் க.பொன்முடி, செஞ்சி மஸ்தான் ஆகியோர் குடும்பத்தாரிடம் வழங்கி ஆறுதல் தெரிவித்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் பழனி, சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, டாக்டர் லட்சுமணன் மற்றும் பலர் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில்

ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு அரசின் வாகனங்கள்!

அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்

சின்னாளப்பட்டி, மே 17-

திண்டுக்கல் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர், ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், கொடைக்கானல், வத்தலக்குண்டு ஒன்றியப் பெருந் தலைவர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிய வாகனங்களுடன், மாவட்ட ஊராட்சித் தலைவர், ஒன்றிய பெருந்தலைவர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒன்றியப் பெருந்தலைவர்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஊராட்சிக் குழு புது வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் கடந்த 10ந் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒன்றியப் பெருந்தலைவர்கள் முதல்வர்களிடமிருந்து பெற்ற புது வாகனங்களுடன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் வாழ்த்துப் பெற வருகை தந்தனர்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி இல்லம் முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய கழக செயலாளருமான ப.க.சிவகுருசாமி, மாவட்ட ஊராட்சிக்கு குழு தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஒன்றிப் பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், கொடைக்கானல் ஒன்றிய பெருந்தலைவர் சுவேதா ராணி கணேசன், வத்தலக்குண்டு ஒன்றியப் பெருந்தலைவர் பரமெஸ்வரி முருகன், ஆகியோர் தங்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிய வாகனங்களின் சாவிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் கொடுத்து வாழ்த்துப் பெற்றனர்.

அவர்களை வாழ்த்தி பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு அரசு புதிய வாகனம் வழங்கி இருப்பதால் ஒன்றியப் பெருந்தலைவர்கள் சிறிய கிராமங்களுக்குக் கூட சென்று நலத்திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்ய முடியும், இது தவிர பழைய வாகனங்களால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, பராமரிப்பு செலவு, எரிபொருள் செலவு அதிகரித்து வந்தது. இப்போது புதிய வாகனங்கள் வழங்கி இருப்பதால் ஒன்றியங்களுக்கு பொது செலவினங்கள் குறையும் என்றார். ஒன்றியப் பெருந்தலைவர்கள் தமிழ்நாடு அரசுக்கு பெருமை தேடி தரும் வகையில் ஊராட்சிகளை மேம்படுத்த வேண்டுமென வாழ்த்தினார்.

நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மு.ராணி (வளர்ச்சி) தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய பெருந்தலைவர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுரு சாமி, ஆத்தூர் மகேஸ்வரிமுருகேசன். ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ஆத்தூர் முருகேசன், பாறைப்பட்டி ராமன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், ஒன்றிய துணைப் பெருந்தலைவர்கள் ராஜேஸ்வரி தமிழ்செல்வன், ஹேமலதா மணிகண்டன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, அமைச்சரின் உதவியாளர் ஹரி ஹரன், தி.மு.க. நிர்வாகிகள் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் வாஞ்சிநாதன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், தி.மு.க. நிர்வாகி நந்தி நடராஜன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

முதல்வர் உத்தரவின்பேரில்

கள்ளச்சாராயத்தை ஒழிக்க மாவட்ட நிர்வாகம் தீவிர நடவடிக்கை!

செங்கல்பட்டில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்தபின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

செங்கல்பட்டு, மே.17-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.05.2023) கள்ளச்சாராயம் அருந்தியதால் செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

செங்கல்பட்டு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதன் பேரில், நேரில் சந்தித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரையில் கள்ளச்சாராயம் பாதிப்பினால் 4 நபர்கள் மருத்துவமனைக்கு வரும் வழியிலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களுள் 4 நபர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் அருந்திய கள்ளச்சாராயத்தில் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மெத்தனால் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இக் கொடூர செயல்களை செய்கின்ற குற்றவாளிகள் மீது தமிழக அரசால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் கள்ளச்சாராயம் ஒழித்திட மாவட்ட நிர்வாகத்தினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அனைவரும் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது, செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ராஜஸ்ரீ, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அறிவிப்பு!

சென்னை, மே 17 -

திரு.வி.க. நகர் வடக்கு பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்றும் நாளையும் நடைபெறுகிறது

கூட்டம் நடைபெறும் நாள், வட்டம், இடம், நிகழ்ச்சி ஏற்பாடு விவரம் வருமாறு:

இன்று (17.5.2023) மாலை 5 மணிக்கு 71 'அ' வட்டம் - எண். 48 பெரம்பூர் நெடுஞ்சாலை ஜமாலியா, பெரம்பூரில் மா. ருத்ர மூர்த்தி ஏற்பாட்டிலும், மாலை 6 மணிக்கு 74வது வட்டம், நேருஜி திருமண மண்டபம், கான்ஸ்டபிள் சாலை அயனாவரத்தில் எஸ். புஷ்பராஜ் ஏற்பாட்டிலும் இரவு 7 மணிக்கு 74 'அ' வட்டம் - டவர் ஹால் இ. எம்.எஸ்.ரோடு, மங்களாபுரத்தில் ஜி.கிருஷ்ணகுமார் ஏற்பாட்டிலும் நடைபெறுகிறது.

நாளை (18.05.2023) மாலை 5 மணிக்கு 71 வது வட்டம் - பெரம்பூர் வியாபாரிகள் நல சங்கம், பாரதி சாலை, பெரம்பூரில் பரிமளா சுரேஷ்பாபு ஏற்பாட்டிலும், மாலை 6 மணிக்கு 72 வது வட்டம் - பிரைட் டன்ஸ் சாலை, கன்னிகாபுரத்தில் எம்.ஏ. டீக்கா ஏற்பாட்டிலும், இரவு 7 மணிக்கு 72 'அ' வட்டம் - வ.உ.சி. நகர், 1வது தெரு, ஆடுதொட்டியில் எம். இசட் அபோய் ஏற்பாட்டிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இந்து சமய அறநிலை துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமம் அமை ச்சர் பி.கே. சேகர் பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்வில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், டாக்டர் . கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., மு.தம்பிதுரை , பி. உதய சங்கர், புனிதவதி எத்திராசன் எம்.சி., மு.சரவணன் எம்.சி., தில்லை கதிரவன், ஆர்.ராஜன், புல்லட்.கி. ரமேஷ், புவனவதி, கினார் ஆறுமுகம் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள்ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.

அந்தந்த வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் மற்றும் பாக களப் பணியாளர்கள் கழக செயல்வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா, மாவட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர் உள்ளிட்ட தோழமைக் கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம், கழக உறுப்பினர் சேர்த்தல், கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அம்பத்தூர் தெற்கு பகுதியில்

வட்ட வாரியாக வட்டக் கழக நிர்வாகிகள் - பாக நிலை முகவர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் அறிக்கை

சென்னை, மே 17 -

மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உள்ள வட்டங்கள் தோறும் வட்ட நிர்வாகிள், பாக நிலை முகவர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

90 வது வட்டம்: 17-05-2023 புதன்கிழமை மாலை 4:00 மணி இடம்: திருவல்லீஸ்வரர் நகர்,

87 வது வட்டம்: 17-05-2023 புதன்கிழமை மாலை 6 மணிக்கு.

இடம்: மீரா மஹால் மகாத்மா காந்தி ரோடு குமரன் நகர்.

88 வது வட்டம்: 18-05-2023 வியாழக்கிழமை மாலை 6:00 மணிக்கு. இடம்: மீரா மஹால் மகாத்மா காந்தி ரோடு குமரன் நகர்.

93 வதுவட்டம்: 19-05-2023 வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணிக்கு. இடம்: ஏ.என்.எஸ். சொர்ண மஹால், ஜஸ்டிஸ் ரத்தினவேல் பாண்டியன் சாலை கோல்டன் ஜார்ஜ் நகர் சென்னை 107.

இக்கூட்டங்களில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், 7 வது மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே இக்கூட்டத்திற்கு பகுதி மற்றும் வட்ட நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் இராஜகோபால் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி

90 வது வட்ட செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் நா.நெப்போலியன் அறிவிப்பு

சென்னை, மே 17 -

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி இன்று (17.05.2023) மதியம் 3 மணிக்கு 90-வது வட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் திருவல்லீஸ்வரர் நகரில் உள்ள திருவல்லீஸ்வரர் நகர் நல அலுவலகத்தில் அம்பத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால் முன்னிலையில் வட்டச் செயலாளர் நா. நெப்போலியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சிக்கு நமது 90 வது வட்டத்திற்குட்பட்ட பகுதிகழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் BLA 2 கழகத்தின் மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்ட செயலாளர் நா. நெப்போலியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம் - எழும்பூர் வடக்குப் பகுதி

78 அ வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் ந.பாலு அறிவிப்பு!

சென்னை, மே 17-

எழும்பூர் வடக்குப் பகுதி 78 அ வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து வட்டச் செயலாளர் ந.பாலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி 78 அ வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (17-05-2023 புதன்கிழமை) மாலை 5 மணியளவில் சூளை அங்காளம்மன் கோயில் தெரு உமா சுராஜ் பேலசில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் எழும்பூர் வடக்குப் பகுதிக் கழக செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினருமான சொ. வேலு, தலைமைக் கழக பார்வையாளர் ரத்னா லோகேஷ் வரன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்க உள்ளனர்.

இதில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ந.பாலு தெரிவித்துள்ளார்.

எல்.சீனிவாசன் ஏற்பாட்டில்

49வது வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

தா.இளைய அருணா - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர்

சென்னை, மே 17-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்குப் பகுதி 49 வது வட்ட கழகத்தின் சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி மாவட்ட பிரதிநிதி கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் தர்பூசணி, ஆவின் மோர் பாட்டில் கிர்ணி பழம் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐ.ட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.

பகுதி செயலாளர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் வே.சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மற்றும் மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர்.எம். டி.ரவீந்திரன் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கட்பீஸ் சோமசுந்தர மூர்த்தி வட்ட கழக நிர்வாகிகள் எம்.பழனி, என்.வி. என்.மணி, எ.குமார், கே. ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டராமன், சுதாகர், இ.கதிரவன், தாக்கு பன்னீர்செல்வம், ராயபுரம் கிழக்கு பகுதி முன்னாள் அவைத் தலைவர் என். ஏழுமலை, ஈஸ்வரன், எல்.பகிரதன் , பாக முகவர் ஆர்.பாரதிதாசன், ஜி.விநாயகமூர்த்தி, கலைச்செல்வன், கன்னியப்பன், கா.பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர் பாக முகவர் ஆர். பாரதிதாசன் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டச் செயலாளர் எல் சீனிவாசன் செய்திருந்தார்.

சின்னசேலத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரம் நிதி உதயசந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சேலம், மே 17 -

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் மீனவர் தெருவைச் சேர்ந்தவர் அல்லிமுத்து மகன் பாலகிருஷ்ணன் (ஏரியில் அதிக தண்ணீர் தேங்கி இருந்தால் வலை கட்டும் போது சிக்கி மாயமானார். மறுநாள் சின்னசேலம் தீயணைப்பு மற்றும் மீட்பு குழு நிலைய அலுவலர் பரமசிவம் உள்ளிட்ட குழுவினர் ஏரியில் பாலகிருஷ்ணன் சடலத்தை மீட்டனர். இந்நிலையில் ஏரியில் மீன் பிடிக்கச் சென்று இறந்து போன வாலிபரின் குடும்பத்தினரை சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. நேற்று சின்னசேலம் ஒன்றியக் குழு துணைத் தலைவர் வி.வி.அன்புமணி மாறன் ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் கூறி ரூ.50,000 நிதியுதவி வழங்கினர்.

அதுபோது நகரச் செயலாளர் கே.எம்.செந்தில்குமார், மாவட்டப் பிரதிநிதி முருகேசன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கோம்பையன், மண்மலை எம்.பி.அருள், நிர்வாகிகள் ரவி, அய்யாசாமி, ராமசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

எழும்பூர் வடக்குப் பகுதி

77வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் தி.தயாளன் அறிக்கை!

சென்னை, மே 17-

எழும்பூர் வடக்குப் பகுதி 77 வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இது குறித்து வட்டச் செயலாளர் தி.தயாளன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி 77வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி இன்று (17-05-2023 புதன்கிழமை) மாலை 6 மணியளவில் தட்சிணாமூர்த்தி திருமண மண்டபம், டிமலஸ் சாலை, பட்டாளத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன் தலைமை வகிக்கிறார். வட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் எழும்பூர் வடக்குப் பகுதிக் கழக செயலாளரும் சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினருமான சொ.வேலு தலைமைக் கழக பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ் வரன் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் தி.தயாளன் அறிக்கையில் கூறியுள்ளார்.

மாதவரம் வடக்கு - வடபெரும்பாக்கம் - 17 வது வட்டம்

முன்னாள் மாவட்டப் பிரதிநிதி வி.மோகன் நினைவு நாள் நிகழ்ச்சி!

திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மரியாதை!

சென்னை, மே 17 -

மாதவரம் வடக்குப் பகுதி - வடபெரும்பாக்கம் - 17-வது வட்டம் முன்னாள் மாவட்டப் பிரதிநிதியும் கழக முன்னோடியுமான மறைந்த வி. மோகனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி 19.5.2023 வெள்ளிக்கிழமை வடபெரும்பாக்கத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள், நிர்வாகிகள், தோழர்கள் மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

சென்னை எழிலகம், வருவாய் கூட்டரங்கில், 15.05.2023 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில், தமிழ்நாடு பூமிதான வாரிய கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூடுதல் தலைமை செயலாளர் குமார் ஜெயந்த், நில சீர்திருத்தத்துறை முதன்மைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், நில சீர்திருத்தத்துறை இயக்குநர் (மு.கூ.பொ) டாக்டர் டி.ஜி.வினய், வேளாண்மைத் துறை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, தோட்டக்கலைத் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, பூமிதான வாரிய அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.